[1979 மார்ச் 21

ஆனால் அதிலே ஏதாவது தவறான வசூல் போன்றவைகளை நடத்தி பரிசுப் பொருட்கள் அதிக விலையில் கொடுக்கப்படு கின்றதா என்பதைத்தான் சிந்திக்க வேண்டுமே தவிர, மற்ற வைகள் எல்லாம் பண்பாட்டின் அடிப்படையிலே நடைபெறு வதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருவாய்.

*வினா எண். 502 —திரு. என். கிட்டப்பா, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1978 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருவாய் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 18,34,000. இதில் செலவு போக, நிகர இலாபம் ரூ. 6,25,000.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை மாவட்ட தலைநகரங்களிலே நடத்துவதற்கு அரசு முன்வருமா ? அப்படி அரசுத் துறையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை நடத்த இயலவில்லை என்றால் மாவட்ட தலைநகரங்களில் அவ்வாறு நடத்துவதற்கு நகராட்சிகளுக்காவது அனுமதி வழங்குமா? அப்படி அனுமதி வழங்கும்போது அதற்குத் தேவையான உதவித் தொகையினை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, அரசு இது குறித்த தெளிவான முடிவுகளை அறி வித்திருக்கிறது. நகராட்சிகள் நடத்த விரும்பினால் நடத்த லாம். நகராட்சிகள் நடத்த விரும்பாத இடங்களில் மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலாத் துறையோ அல்லது செய்தித் துறையோ நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலேயே கடந்த ஆண்டு மதுரையிலே சுற்றுலாத்துறை பொறுப்பேற்று பொருட்காட்சியை நடத்தியது. சேலத்திலே செய்தித்துறை பொறுப்பேற்று நடத்தியது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவிப்பது போன்று நகராட்சிகள் நடத்த முன்வருமேயானால் அதற்கு அரசு இயன்ற உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 21]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் இந்த சுற்றுலாத்துறை பொருட்காட்சியின் மூலமாக நல்ல வருமானம் கிடைத்திருக்கிறது என்று மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் இப்படிப்பட்ட பொருட்காட்சிகளினால் பொது மக்களுக்கு நல்ல விளக்கங்கள் கிடைக்கின்றன. ஆகவே மாவட்டத் தலைநகரங்களில் இந்த பொருட்காட்சிகளை நடத்துவதற்கென்று அரசு சுற்றுலா துறையில் பொருட்காட்சித்துறை என்று ஒரு தனித் துறை அமைத்து ஆவன செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் இது போன்ற பொருட்காட்சிகளை அரசின் சார்பிலேயோ அல்லது செய்தித்துறையின் சார்பிலேயோ நடத்துவதற்கு தகுந்த ஒரு நிர்வாகப் பிரிவு வேண்டும் என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தனியார்கள் இப்படிப்பட்ட பொருட்காட்சியை நடத்துவதற்கு அரசு தற்போது அனுமதி வழங்கி வருகிறதா? அப்படித் தனியார் பொருட்காட்சிகளை நடத்த அரசு அனுமதி வழங்குமேயானால் அத்தகைய பொருட்காட்சிகளை நடத்துவதற்கு அரசு நிதியில் இருந்து ஏதேனும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, தனியார்கள் பொருட்காட்சியை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை. அவ்வாறு நடத்துவதற்கு நகராட்சி மன்றமோ, ஊராட்சி ஒன்றியங்களோ அனுமதி வழங்கக் கூடாது என்ற ஆணையையும் அரசு பிறப்பித்திருக்கிறது. ஆனால் சில தனிப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கல்விநிறுவனங்கள் போன்றவை பொது நோக்கத்திற்காகவோ அல்லது அந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவோ நடத்தப்படுகின்ற பொருட்காட்சிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் மூலம் தற்போது நடத்தப்பட்டு வருகின்ற பொருட்காட்சியை தொடர்ந்து நடத்துவதற்கு தனியாக ஒரு துறை அமைத்து அந்தந்த இடங்களில் வசூலாகின்ற நிதியை அந்தந்த மாவட்டங்களுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடுசெய்யுமா?

[1979 மார்ச் 21

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சியை நடத்துவதற்கு என்று தனியாக துறை அமைக்க வேண்டிய அவசியமில்லை. சுற்றுலாத்துறை மூலமோ அல்லது செய்தித்துறை மூலமாகவோ நடத்துவதற்கு தகுந்த அளவில் தனியாக ஒரு பிரிவு அமைக்கலாமா என்பதுதான் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில் ஆண்டுதோறும் வர்த்தக பொருட்காட்சி நடை பெறுவதை நிரந்தரமாக நடத்தப்படுவதற்கு வேண்டிய கட்டி டங்கள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சென்னையில் சுற்றுலாத் துறை நடத்துகின்ற பொருட்காட்சி நடைபெறுகின்ற அந்த இடத்தின் ஒரு பகுதி இந்திய பாது காப்புத்துறைக்கு சொந்தமாக இருக்கிறது. அந்த இடத்தை மாநில அரசுக்கு மாற்றித் தரவேண்டும் என்று இந்திய பாது காப்பு அமைச்சகத்திற்கு எழுதியிருக்கிறோம். அதற்கான உரிமம் வந்துவிடுமானால், இப்படிப்பட்ட ஒரு நிரந்தர பொருட் காட்சி அமைக்க வேண்டும் என்ற ஒரு திட்டம் அரசின் பரி சீலனையில் இருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சுற்றுலாத்துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற பொருட் காட்சியின் போது, பல துறைகளின் சார்பாக பல கட்டிட அமைப்புகள் ஆண்டுதோறும் கட்டப்பட்டு பொருட்காட்சி முடிந்த உடன் இடித்துவிடுகிறார்கள். இப்படி கட்டப்படுகிற இடத்தை இடித்துவிடாமல் அப்படியே விட்டு வைத்தால் அதை அடுத்த ஆண்டுக்கும் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும். செலவும் மிச்சப்படும். அதே நேரத்தில் கட்டிடங்கள் அப் படியே இருந்தால், அதில் வெளியிடங்களில் இருந்து வருகின்ற வர்கள் வந்து தங்குவதற்கும் பயன்படுத்தினால் வருவாயும் கிடைக்கும். ஆகவே இவற்றை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் : இந்தக் கேள்விக்குத்தான் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விடை அளித்திருக்கிறேன். பொருட்காட்சி நடத்தப் படுகின்ற இடம் நமக்கு சொந்தமாக உரிமை கிடைத்து விடுமானால், அந்த இடத்தில் நிரந்தரமாக கட்டிடங்கள் கட்டும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இப்போது கட்டப்படும் கட்டிடங்கள் நிரந்தரமான கட்டிடங்கள் அல்ல.

1979 மார்ச் 21]

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மதுரையில் சுற்றுலாத்துறை பொருட்காட்சியை நடத்தியது. வருகின்ற ஆண்டிலும் சுற்றுலாத்துறையின் மூலம் பொருட்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா? அத்துடன் மதுரை மாநகராட்சியிலிருந்து இந்த பொருட்காட்சியை நடத்த வேண்டும் என்று கேட்டு அனுமதி கேட்டிருக்கிறார்களா? அப்படி கேட்டிருந்தால் அனுமதி வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி ஆகிய இவைகள், இப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நடத்துகிற பொழுது, மாநகராட்சி, நகராட்சிகளில் பணியாற்றும் அலுவலர்கள் நீண்ட நேரமும், அவர்களுடைய முழு நேரமும் இந்த வேலையில் ஈடுபட வேண்டியிருக்கும், அதன் காரணமாக அன்றாடம் நடைபெறவேண்டிய வேலைகள் தடைபடுகின்றன என்ற ஒரு குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவே சென்ற ஆண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக பொறுப்பேற்று மதுரையில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. இந்த ஆண்டும் மதுரை மாநகராட்சி, அரசே இந்த பொருட்காட்சியை நடத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக பொருட்காட்சி நடத்தலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : சென்ற ஆண்டு நடத்தப்பட்ட பொருட்காட்சியில் கிடைத்த வருமானத்தை அமைச்சர் அவர்கள சொன்னார்கள். இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக நடத்தப்பட்ட பொருட்காட்சியில் வருமானம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக்கேள்வி போட்டால் அதற்கான தகவலை திரட்டிக் கொடுக்க முடியும். என்றாலும் இந்த ஆண்டு சென்ற ஆண்டை விடவும் அதிக லாபம் என்று தான் அறிகிறேன்.

கொல்லிமலை நீர் வீழ்ச்சி.

* வினா எண் 503—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையில் உள்ள புகழ்பெற்ற கோவில் அரப்பளீசுவரர் ஆலயம் பகுதியில் உள்ள 300 அடி உயரத்தில் விழும் நீர் வீழ்ச்சி உள்ள இடத்தைச் சுற்றுலா ஸ்தலமாக அரசு மாற்ற உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?